


# “நூற்றாண்டு கால அறிவுப் போர்தான் இந்த அறிவுத் திருவிழா!”

**கழக இளைஞர் அணி நடத்திய ‘தி.மு.க. 75 அறிவுத் திருவிழா’ நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக நடைபெற்ற ‘இருவண்ணக் கொடிக்கு வயது 75’ கருத்தரங்கத்தின் ஐந்தாவது அமர்வில் தலைமை வகித்து ஒன்றிய-மாநில உறவுகள் குறித்த உயர்நிலைக் குழு உறுப்பினர் டாக்டர் மு.நாகநாதன் அவர்கள் ஆற்றிய உரை :**

“திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கி 75 ஆண்டுகள் நிறைவு அடைகிறது. இதையொட்டி ஓர் அறிவுத் திருவிழாவாக இளைஞர் அணியினர் கொண்டாடுவது பெரும் மகிழ்ச்சி அளிக்கிறது. இந்த 75 ஆண்டு பயணத்தில் ஏறக்குறைய 60 ஆண்டுக் காலம் இந்த இயக்கத்தோடு நான் தொடர்பில் இருந்தேன், தொடர்ந்து பயணிக்கிறேன் என்ற பெருமையோடு இந்த அமர்வுக்குத் தலைமை தாங்குவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

திராவிட இயக்கத்தைப் பற்றி, அறிவுத் திருவிழா என்று இன்றைக்கு நாம் அறிவித்து விழா கொண்டாடுகிறோம். இது சரியான தலைப்பு. ஏனென்றால், அண்மையில் ‘Speaking Constitution’ என்ற தலைப்பில் ஒரு நூல் வெளியாகியிருக்கிறது. அந்த நூலை எழுதியவர், ஆந்திர மாநிலத்தில் மூத்த வழக்கறிஞராகவும், மனித உரிமைகள் செயல்பாட்டாளராகவும் இருந்த கண்ணபிரான் என்பவர். அவர் மறைந்துவிட்டார். அவரின் மகள் கல்பனா என்பவர்தான் அந்த நூலை வெளி யிட்டிருக்கிறார். அந்த நூலில் ‘தந்தை பெரியார் தலைமையில் திராவிட இயக்கம் நூறு ஆண்டுகளுக்கு முன்பு ஓர் அறிவுப் போரைத் தொடங்கியது’ என்று எழுதியிருக்கிறார்.



டாக்டர் மு.நாகநாதன்
ஒன்றிய-மாநில உறவுகள் குறித்த உயர்நிலைக் குழு உறுப்பினர்





1925-ஆம் ஆண்டு சுயமரியாதை இயக்கம் தொடங்கப்பட்டிருக்கிறது. நூறு ஆண்டுகள் ஆகிவிட்டன. அதை நினைவுகூர்ந்துதான் தீவிர இடதுசாரி இயக்க உணர்வு படைத்த கண்ணபிரான் எழுதியிருக்கிறார். அந்த அறிவுப் போரின் தொடர்ச்சி தான் இந்த அறிவுத் திருவிழா.

## தபால்களை அடுக்கிக் கொடுப்பேன்

1976-ஆம் ஆண்டு நெருக்கடி நிலை அறிவித்தபோது, பலர் கலைஞரை விட்டு விலகி விட்டார்கள். சமீபத்தில் மறைந்த ‘முரசொலி’ செல்வம் என் வீட்டுக்கு வந்து, ‘மாமா உங்களை அழைத்து வரச் சொல்கிறார், அவருக்கு உதவியாக இருக்கும்படி கேட்கிறார்’ என்று சொன்னார். நான் பல்கலைக் கழகத்தில் அப்போதுதான் விரிவுரையாளராகச் சேர்ந்து ஓராண்டு ஆன நேரம்.

தினமும் காலையில் 7.30 மணிக்கு கலைஞர் வீட்டுக்கு வருவேன். 8.30 மணி வரை இருப்பேன். பல்கலைக்கழகத்துக்கு 9 மணிக்குச் சென்றுவிடுவேன். கலைஞருக்கு வருகிற தபால்களை எல்லாம் எடுத்து அடுக்கிக் கொடுப்பேன். அப்போதுதான் பிப்ரவரியில் ‘அண்ணா சமாதிக்கு வராதவர்கள் யார்’ என்று ஒரு பட்டியல் போட்டு, மிசா சட்டத்தில் கைதானவர்கள் யார் என்று வெளியுலகத்துக்குத் தெரியப்படுத்தினார் கலைஞர்.

வள்ளுவர் கோட்டத்துக்கு அடிக்கல் நாட்டிய கலைஞருக்கு வள்ளுவர் கோட்ட திறப்பு விழாவுக்கு அனுமதியில்லை. ‘முரசொலி’ அலுவலகத்துக்கு இந்த வழியாக காரில் செல்லும்போது எல்லாம் கலைஞர் வள்ளுவர் கோட்டத்தை ஏக்கத்துடன் பார்த்தபடியே செல்வார்.

## 50 ஆண்டுகாலம் கட்டிக் காத்தவர்

1976 செப்டம்பர் மாதம் அண்ணா பிறந்தநாள் கூட்டத்துக்கு, காவல்துறை இழுத்தடித்து அனுமதி தந்தது. அது ஓர் அரங்கக்கூட்டம். அந்தக் கூட்டத்தில் டி.கே.சீனிவாசனும் கலைஞரும் பேசினார்கள். தனக்கே உரிய பாணியில் டி.கே.சீனிவாசன் கலைஞரின் ஆளுமையைப் பாராட்டிப் பேசினார். அதற்குப் பிறகு, கலைஞர் பேசும்போது சொன்னார், ‘என்னுடைய பெருமையைப் பற்றி டி.கே.சீனிவாசன் சொன்னார். நான் ஒன்றை மட்டும் சொல்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தை யார் அழிக்க நினைத்தாலும், என்னை அழித்துவிட்டுதான் அவர்களால் தி.மு.க.வைத் தொட முடியும்’ என்று சொன்னார். ஏனென்றால், அன்றைக்கு தி.மு.க-தடை செய்யப்படலாம் என்ற ஒரு பேச்சு இருந்தது. அப்படிப்பட்ட தி.மு.க-வின் 75-வது ஆண்டு நிறைவுவிழாவை வள்ளுவர் கோட்டத்தில் நான் நின்று பேசுவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

கலைஞர் எந்தக் காலத்திலும் யாருக்கும் திராவிட இயக்கத்தை விட்டுக்கொடுத்ததில்லை. பேரறிஞர் அண்ணாவும், தந்தை பெரியாரும் இந்தத் திராவிட இயக்கத்துக்கு தலைமை வகித்தார்கள் என்றால், கலைஞர் 50 ஆண்டுக் காலம் இந்த இயக்கத்தைக் கட்டிக் காப்பாற்றினார் என்பதை நான் நன்கு அறிவேன்.

இன்றைக்கு நமது முதல்வராக இருக்கிற முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள், அன்றைக்கு வெளியே கலைஞர் நெருக்கடியை சந்தித்திருந்தபோது சிறையில் வாடியவர். அவரைவிட அரசியலில் தியாகம் செய்தவரை நாம் பார்க்க முடியுமா?

என் மகன் எழிலன், ஆயிரம் விளக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில், ‘அப்பா இந்த வள்ளுவர் கோட்டத்தை நாங்கள் சீரமைத்திருக்கிறோம்’ என்று சொன்னபோதுதான், கலைஞர் என் நினைவுக்கு வந்தார். எந்தக் கலைஞர் காரிலிருந்து வள்ளுவர் கோட்டத்தைப் பார்த்தாரோ, அந்தக் கலைஞர் இன்றைக்கு இல்லை. ஆனால், வள்ளுவர் கோட்டம் ஒளிர்கிறது. திராவிடம் ஒளிர்கிறது.

## 11.6 விழுக்காடு உச்ச வளர்ச்சி

திராவிட இயக்கம் தமிழர்களின் வாழ்வுக்காகப் போராடிய இயக்கம்; மொழி உரிமைக்காகப் போராடிய இயக்கம்; தமிழர்களின் பண்பாட்டு உரிமைக்காகப் போராடிய இயக்கம். அதைவிட முதன்மையானது திராவிட பொருளாதாரத்தை மீட்பதற்காகக் கலைஞர் ஆட்சியிலும், அண்ணா ஆட்சியிலும், இன்றைக்கு இருக்கிற முதல்வர் ஆட்சியிலும் பல திட்டங்கள் நிறைவேற்றிய காரணத்தால்தான் இன்றைக்கு தமிழ்நாடு ஒரு வளர்ந்த மாநிலமாக, 11 விழுக்காடு வளர்ச்சி பெற்ற மாநிலமாக இருக்கிறது.

இன்றைக்கு 11.6 விழுக்காடு என்று நாம் உச்சநிலை வளர்ச்சி அடைந்திருக்கிறோம். ஆனால், ஒன்றிய அரசு 6 விழுக்காடுதான் வளர்ந்திருக்கிறது. அவர்களைவிட நாம் ஏறக்குறைய ஐந்து விழுக்காடு வளர்ச்சி உயர்ந்துள்ளோம். ஆனால், ஒன்றிய அரசு எவ்வளவு வரி திரட்டுகிறது என்றால், மொத்த இந்தியாவில் 72.7 விழுக்காடு வரி வருவாய் திரட்டுகிறது. மாநிலங்கள் எல்லாம் சேர்ந்து எவ்வளவு வருவாய் திரட்டுகிறது என்றால் 27.3 விழுக்காடுதான் திரட்டுகிறது. 72 விழுக்காடு வரிகளை திரட்டுகிற ஒன்றிய அரசு 70 விழுக்காடு செலவு செய்யும் என்று எதிர்பார்ப்பீர்கள். இல்லை, வெறும் 48 விழுக்காடுதான் செலவு செய்கிறது.

ஆனால், இந்தியாவில் உள்ள அனைத்து மாநில அரசும் சேர்த்து சராசரியாக 52 விழுக்காடு செலவு செய்கிறது. 27 விழுக்காடு வருவாய் உள்ள மாநிலங்கள் 52 விழுக்காடு செலவு செய்கிறது. 60 விழுக்காடுக்கு மேல் தமிழ்நாடு அரசு செலவு செய்கிறது.

11.6 விழுக்காடு வளர்ச்சி பெற்றிருந்தாலும்கூட கடன் வாங்கித்தான் நம்மால் மக்கள்நலத் திட்டங்களை நிறைவேற்ற முடிகிறது. ஏனெனில், நம்மிடம் பெறக்கூடிய தொகையில் உரிய பங்கை ஒன்றிய அரசு நமக்குத் திருப்பித்தருவதில்லை. கடன் வாங்குவதிலும் நாம் உரிமையாக வாங்கிட முடியுமா என்றால், முடியாது. அதற்கும் ஒன்றிய அரசின் அனுமதி வாங்க வேண்டும். இப்படிப்பட்ட நெருக்கடியான நிலையிலும் தமிழ்நாடு தொடர்ந்து வளர்ச்சி அடைகிறது. ஆனால், மோடியோ ஒட்டுமொத்த இந்தியாவையும் பொருளாதார நெருக்கடியில் சிக்க வைத்திருக்கிறார்.

## பொருளாதாரத் தேக்க நிலை

இன்றைக்கு, தங்கத்தின் விலை எவ்வளவு என்று உங்களுக்கு தெரியும். தங்கத்தின் விலை கிட்டத்தட்ட ஒரு லட்சம் ரூபாயை நெருங்குகிறது. காரல் மார்க்ஸ் ஒருவர்தான் இந்தத் தங்கத்தைப் பற்றி 19-ஆம் நூற்றாண்டிலேயே சொன்னார். ‘பணத்துக்குப் பதிலாக தங்கம் பரிமாற்ற மதிப்பு பெறுவது ஆபத்தானது. தங்கம் விலை உயர்ந்தால் அது, பண சுழற்சியைக் கட்டுப்படுத்திவிடும். பண சுழற்சியைக் கட்டுப்படுத்திவிட்டால் பொருளாதாரம் தேக்க நிலை அடையும்’ என்று அறிஞர் மார்க்ஸ் சொன்னார். இப்போது அத்தகைய பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

பத்து ஆண்டுகளுக்கு முன்பு, இந்தியாவில் குடும்ப சேமிப்பு 20 விழுக்காடாக இருந்தது. ஆனால், மோடியின் பத்து ஆண்டுக் கால ஆட்சிக்குப் பின் குடும்ப சேமிப்பு 4 விழுக்காடாக வீழ்ச்சியடைந்துவிட்டது. அதே நேரத்தில் 2023-இல் நடுத்தர குடும்பங்கள் வாங்கிய கடன் அளவு 38.5 லட்சம் கோடி. நடுத்தர குடும்பங்களும் கடனில் இருக்கிறது, நாடும் கடனில் இருக்கிறது.

மோடி அரசால் பொருளாதாரத்தை சிறப்புற மேலாண்மை செய்ய முடியவில்லை. அதனால்தான் பொருளாதார வளர்ச்சியில் 6 விழுக்காட்டை எட்டுவதற்கே திண்டாடியுள்ளார்கள். இந்தச் சூழலில் 11 விழுக்காடு வளர்ச்சியை தமிழ்நாடு கண்டிருக்கிறது என்றால், அதற்கு திராவிட இயக்கத்தின் பொருளாதார அடிப்படைதான் காரணம்.”

---

## அனைவரும் போற்றும் அறிவுத் திருவிழா!

**கவிஞர் பிருந்தா சாரதியின் முகநூல் பதிவு :**

‘அண்மையில் வள்ளுவர் கோட்டத்தில் உதயநிதி ஸ்டாலின் முன்நின்று நடத்திய ‘அறிவுத் திருவிழா’வில் இளைஞர்களை உணர்ச்சி வசப்பட வைத்து அரசியல் நடத்தாமல் கொள்கைக் கோட்பாட்டோடு வழிநடத்த முனையும் அவரின் தலைமைப் பண்பு வெளிப்பட்டது.

அந்நிகழ்ச்சியில் அவர் வெளியிட்ட ‘காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு’ என்ற நூலை வாசித்து வருகிறேன். வரலாற்றைப் படிக்க வைத்துக் கொள்கைகளை விவாதிக்கும் அறிவுத் தளத்தில் அரசியலைக் கொண்டு செல்ல விரும்பும் அவரது ஆர்வம் அதில் தெரிகிறது.

அரசியல் என்பது வெளிப்பார்வைக்கு சதுரங்க விளையாட்டு போல் தெரியும். ஆனால், அந்த விளையாட்டு சமுதாயத்தில் நடக்கும் கண்ணுக்குத் தெரியாத நீண்ட நெடிய போரின் குறியீடு. நிஜமான போரின் வெற்றியே ஒரு தலைவனின் குறிக்கோளாக இருக்க வேண்டும். சதுரங்க விளையாட்டின் வெற்றி தோல்விகள் அவனது நீண்ட பயணத்தை நிறுத்திவிடக் கூடாது. அவனது நோக்கம் இறுதி வெற்றி. அது தனக்கான வெற்றி அல்ல... தான் சார்ந்த சமூகத்துக்கான நிரந்தர வெற்றி அது. அதை உணர்ந்தவராக அதற்கான தகுதிகளோடு உதயநிதி எழுகிறார்.’